அறிவாயுதம் ஏந்துவோம்

# ஆண்ட பரம்பரை ஆண்டிப் பரம்பரையாக ஏன் மாறியது? எப்படி மாறியது?




தொகுத்தவர்
அக்னிக்குல பெருந்தலைவன்
சி.என்.இராமமூர்த்தி



வெளியீடு
ஷத்ரியாஸ் டாக்குமெண்டரி
[வன்னியர் கூட்டமைப்பின் ஒரு அங்கம்]
சென்னை-34.

**@Copyright - C.N.Ramamurthy M.Com, B.L. Founder President, Vanniyar Kootamaippu.**

**e-Book Publication - E-edition Version - 1 - 2021**

**Publisher:**

**Kshatriyas Documentary**

**For Contacts:**

**Kshatriyas Documentary**

**# 7, First Main Road,**

**Kamdar Nagar, Nungambakkam,**

**Chennai - 600 034**

**Email - info@vanniyarkootamaippu.com**

**+91 9941311788**

**URL: www.vanniyarkootamaippu.com**

# ஆண்ட பரம்பரை!
# ஆண்டிப் பரம்பரையாக!!
# ஏன் மாறியது? எப்படி மாறியது??



இந்த சோகக் கதையை நாம் ஆராய்ந்து எழுதப் புகுமுன், சென்ற கால இந்திய தேச சரித்திரத்தையும் நம் தமிழ்நாட்டு சரித்திரத்தையும் நாம் சற்று கவனத்தில் கொண்டு வர வேண்டியதாக இருக்கின்றது. தமிழ் நாட்டில் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்திருந்தது போல் தமிழ்நாட்டிற்கு வடக்கே அனேக வம்ச பரம்பரையைக் கொண்ட அரசர்கள் ஆட்சி செய்திருந்தார்கள். உதாரணமாக மவுரியைர், குப்தர்,

ஹர்சர், ராஜபுத்திரர், கூர்ஜார், ராஷ்டிரகூடர், மராட்டியர், பாஞ்சாலர், மொகலாயர், ராயர்கள் மற்றும் இது போன்ற அனேக எண்ணற்ற அரசர்கள் இந்த பரத கண்டத்தை பல கூறுகளாக பிரித்து ஆட்சி செய்து வந்துள்ளனர். ஆனால் இவர்களிடையே எப்போதும் ஒற்றுமை இருந்ததே இல்லை. இந்து

மன்னர்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் கவிழ்ப்பதும், கொல்லுவதும் போன்ற அடாத செயல்களில் ஒவ்வொரு வரும் இறங்கி வலிமை மிக்கோர் ஆட்சிக்கு வரத் தலைப்பட்டனர்.

## வட இந்தியாவின் மீது
## ஆப்கானிய மொகலாயர்கள் படையெடுப்பு

இவ்வரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த இந்தியாவின் வடமேற்கே உள்ள, ஆப்கானிஸ்தான் தேசத்து மொகலாய மன்னர்கள் சமயம் பார்த்து இந்த பரத கண்டத்தின் மீது படையெடுத்து வந்து வெற்றி கண்டு, நாலா வட்டத்தில் வட இந்தியா எங்கும் தங்கள் சாம்ராஜ்யத்தை நிலை நாட்டிக் கொண்டனர்.



இந்த படை எடுப்பு மெல்ல மெல்ல தெற்கு நோக்கியும் நகரலாயிற்று. இதனால் மராட்டியம், கர்னாடகம், ஆந்திரம் எல்லாம் மொகலாயர் வசம் சிக்கலாயிற்று. ஏனைய தேசங்களை அடிமைப்படுத்தி தனது காலடியில் கொண்டு வந்த

மொகலாயர்கள் வட இந்தியாவில் டில்லியை தலைமையாகக் கொண்டு ஆட்சியை நடத்தினதோடு கூட, தென்னிந்தியாவைச் சார்ந்த மைசூரிலும், தனது பிரதிநிதியை நியமித்து இதுவரையில் தாங்கள் பிடித்த தேசங்களை நிர்வாகம் செய்யவும் மேலும் தெற்கிலுள்ள தமிழ்நாட்டின் நிலப்பரப்பை பிடிக்கவும் திட்டமிடலாயினர். இது விஷயத்தில் இவர்களுடைய எண்ணமும் ஓரளவு நிறைவேறலாயிற்று. காரணம்:- அச்சமயத்தில் தொண்டை நாட்டில் வலிமைமிக்கதொரு ஆட்சி நடைபெறவில்லை.

## தமிழ்நாட்டில், ராயர், மராட்டியர் மொகலாயர் படையெடுப்பு!


தொண்டை நாட்டில் பல்லவ வம்சத்தின் பராக்கிரம மிக்க மன்னர்கள் முன்னமேயே காலமாகி விட்டபடியாலும் மகேந்திர வர்மன், நரசிம்ம வர்மன் போன்ற இராஜ தந்திரத்தில் சிறந்த அறிவாளிகள் அப்போது தொண்டை நாட்டில் ஆட்சி செய்யாததினாலும் பல்லவ சாம்ராஜ்யம் அப்போது இடிந்து சுக்கு நூறாக வீழ்ந்து விட்டது. இந்த சாம்ராஜ்யத்தின் கடைசி மன்னனாக இருந்தவன் அபராசித வர்மன் என்பவன். (இந்த அரசன் தான் திருத்தணி கோயிலை கட்டியவன்) இவனுக்கு பின்பு வந்த அரசர்களும் வலிமை குன்றி ஒற்றுமை குன்றி இருந்தபடியால் மாமல்லன் (நரேந்திர வர்மன்) ஸ்தாபித்த பல்லவ சாம்ராஜ்யம் பல வேற்று நாட்டு அரசர்களிடம் கைமாறி கைமாறி முறையே சாளுக்கிய வம்சத்தினிடமும் ராயர் பரம்பரையிடமும் மற்றும் மராட்டியரிடமும் முடிவில் மொகலாயர்களிடம் அடிமைப்பட்டு விட்டது.



இத்தருணத்தில் தொண்டை நாட்டை ஆண்டு இருந்த பல்லவர்களின் வம்ச பரம்பரையினர் எதிரி நாட்டு அரசர்களின் தாக்குதலினால் அல்லல்பட்டு நாலா வட்டத்திலும் சிதறி ஓடினர். எதிரிப் படைகள் எட்டிப்பாரா இடங்களில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டு அந்தந்த ஊர்களில் தங்களுடைய இராஜ்யங்களை அமைத்துக் கொண்டனர்.

ஆனால் இந்த இராஜ்யங்கள் எல்லாம் குறுகிய அளவிலும் சின்னஞ் சிறியதாகவும் அமைத்து விட்டபடியால் பிற்காலப் பல்லவர்கள் முன் போல் பெருத்த பேரரசர்கள் என்ற நிலையில் இருக்க முடியாமல் போய்விட்டது. மேலும் இவர்கள் அமைத்த சின்னஞ்சிறு ராஜ்யங்களும் சங்கிலிக் கோர்த்த அமைப்பு அளவில் ஒன்றை ஒன்று சேர்ந்தார்ப் போல் இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பரவலாய் இருந்தபடியால் இவர்களுக்குள் தொடர்பும் ஒற்றுமையும் கூட ஏற்பட வழியில்லாமல் போய்விட்டது.

# பல்லவ பேரரசு குலைந்து சிற்றரசாக மாறிய விதம்!



இத்தமிழ் நாட்டை ஒரே குடையின் கீழ் அரசாண்ட பல்லவ அரசு பரம்பரையினராகிய வன்னியர்களின் பேரரசு குலைந்து இத்தருணத்தில் தான் சிற்றரசுகளாக மாறி ஆட்சி செய்ய தலைப்பட்டன. இது கூட நீண்ட நாள் நிலைத்திருக்கவில்லை.

ஆந்திர நாட்டு அரசரான கிருஷ்ண தேவராயர் காலத்திலும் மராட்டியர் படையெடுத்து தஞ்சையை ஆண்ட சரபோஜி ராவ் அவர்கள் காலத்திலும் பின்பு ஆற்காடு நவாப் தர்பார் ஏற்று ஆட்சி செய்த காலத்திலும் வன்னியர்களின் ராஜ்யம் சின்னஞ்சிறு ராச்யங்களாக இருந்தாலும் சுதந்திரமாக அரசாட்சி நடந்து வந்ததானது, மேலே கண்ட 3 பேரரசர்களின் தாக்குதலினால் உடைந்து விட்டன. பல வன்னிய சிற்றரசர்கள் அடங்கி அடிமைப்பட்டு கப்பம் கட்ட கவலைப்பட்டு விட்டனர்.

காலம் செல்லச் செல்ல இவர்கள் ஸ்தாபித்த சிறு சிறு ராச்யங்களும், அடிக்கடி அழிந்தும், எழுந்தும், ஒழிந்தும் போயின. பல குற்றியிரும் குலை உயிருமாக இருந்து வரத் தலைப்பட்டன.

...

# வன்னிய சிற்றரசர்களும் அன்று அடிமை ஆட்சியே செய்ய நேர்ந்தது!

இத்தருணத்தில் தான் வன்னியர்களுக்கு பிடித்தது சனியன். யாருக்கும் அஞ்சாது வாளேந்தி வாழ்ந்து வந்த வன்னிய அரசர்கள் அன்று தங்களது மேல் அரசனுக்கு கட்டுப்பட்டு அடிமையாக வாழத் தலைப்பட்டனர். தங்களது சிற்றரசில் எது ஒன்று நடந்தாலும் தனது மேல் அரசனுடைய சொற்படி கேட்டுத்தான் நடத்த வேண்டி இருந்தது.



இல்லையெனில் தனது மேல் அரசனுடைய படை எப்போதும் தமது சிறிய நாட்டின் மீது பாய் தயாராக இருந்தபடியால் வன்னிய சிற்றரசரும் அவர்களுடைய குடிமக்களும் அன்னிய அரசனுக்கும் அடிமை பட நேர்ந்து விட்டது. அந்தோ பரிதாபம். முடி மன்னர்களாய் இருந்து ஆட்சி செய்து வந்த வன்னிய இனம் அடிமைத்தளை எனும் இரும்பு பிடியில் எப்படியோ சிக்கி அவதிப்படும் நிலைக்கு வந்து விட்டது.

இதை விரும்பாத அனேக வன்னிய வீரர்கள் அந்தந்த இராச்யங்களை விட்டு கண் காணாத இடங்களுக்கு தங்கள் தங்கள் குடும்பங்களுடன் ஓடி மறைந்து வாழத் தலைப்பட்டனர். இந்த எண்ணிக்கை பெரு வாரியாகவும் வளர தலைப்பட்டது. நாட்டை விட்டு காட்டிற்கு சென்ற வன்னிய குடும்பங்கள் அவ்விடத்திலேயே தங்கி வாழவும் தலைப்பட்டு விட்டனர்.

முடிவில் நாடாண்ட பரம்பரை காடேகி அங்கு காட்டு மிருகங்களைப் போல் ஒளிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. பரிதாபம்! பரிதாபம்!! இதை நினைத்தாலே மனம் மிகவும் சஞ்சலப்படுகின்றது. உள்ளமும் மிக துடியாய் துடிக்கின்றது. என்னே கால வித்தியாசம்.

...

## மாமல்லபுரத்தின் மாற்றுப் பெயர்கள்

1. மகாபலிபுரம்
2. ஏழு கோயில் பட்டிணம்
3. திருக்கடன் மல்லை.



### அன்றும், இன்றும்

அன்று, மாமல்லன் (நரசிம்ம வர்மன்) இங்கு 7 கோயில்களை கட்டினான். இடையில் 5 கோயில்கள் கடலில் மூழ்கி விட்டன. இன்று 2 கோயில்கள் தான் இங்கு காட்சி தருகின்றன.

...

## வட இந்தியாவிலும், தமிழ்நாட்டின் மீதும் படையெடுப்பு நடந்த காலம்

| | |
|---|---|
| கிரேக்கர் (அலெக்ஸாண்டர்) | கி.மு. 322 |
| முகலாயர் (கஜனி + கோரி) கி.பி. 11வது நூற்றாண்டு | |
| போர்ச்சுகீசியர் (வாஸ்கோடகாமா) | கி.பி. 1498 |
| டச்சுக்காரர் | கி.பி. 1520 |
| ஆங்கிலேயர் (அர்கின்ஸ்) | கி.பி. 1608 |
| பிரெஞ்சுக்காரர் | கி.பி. 1664 |
| சென்னை போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கட்டியது (கட்டினவர் தாமஸ்டே) | கி.பி. 1639 |
| சென்னை மைலாப்பூர் சாந்தோம் சர்ச்சு கட்டியது | கி.பி. 1522 |
| விஜய நகரத்து மன்னர் மதுரையை பிடித்தது | கி.பி. 1370 |
| மராட்டியரிடம் தஞ்சை அடிமை பட்டது | கி.பி. 1674 |
| மராட்டியர் தமிழ்நாட்டில் ஆட்சி செய்தது | கி.பி. 1761 |
| வரை ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் தமிழ்நாட்டில் முதன் முதலில் கைப்பற்றிய நகரம் ஆற்காடு பிடித்தவர் - ராபர்ட் கிளைவ் | கி.பி. 1750 |

...

# ஆண்ட பரம்பரையினரான வன்னியர் இன்று நகர் புறங்களில் ஏன் வாழ்வதில்லை? அவர்கள் குக்கிராமங்களிலேயே ஏன் வசிக்கின்றனர்?

அன்பர்களே!

இக்கேள்வி மிகவும் முக்கியமான கேள்விதான். அதிலும் இக்கேள்வியில் மிக்க அர்த்த புஷ்டியும் அடங்கி இருக்கிறது. பொதுவாக இன்றுள்ள நிலையில் வன்னியர்களில் பெரும்பாலோர் நகர் புறங்களில் வசிப்பதே இல்லை. கிராமங்களில் தான் வசிக்கிறார்கள். அதிலும் முக்கியமாக இவர்களை சிறிய சிறிய குக்கிராமங்களில் தான் காணலாம்.

நாட்டை ஆண்ட வன்னிய குலத்தினர் அன்று நாட்டை மாற்றானிடம் விட்ட பிறகு இவர்கள் மானத்திற்கு அஞ்சி நாலா திசைகளிலும் பரவி வாழ ஆரம்பித்தனர். யுத்தத்தில் தோற்று ஓடினவர்கள் கண்டம் கண்டமாக சிதறி விட்டனர். கண் காணாத இடங்களில் ஓடி ஒளிந்து வாழ்க்கையை நடத்த முற்பட்டனர். இதனால் இவர்கள் அரசாங்க தலை நகரங்களில் தங்கி அன்று வாழ்க்கையை நடத்த முடியாமல் போய்விட்டது.



# கங்காணிகள் காட்டிக் கொடுத்தனர்! வீர வன்னியர்கள் தூக்கில் தொங்கினர்!

மேலும் இவர்கள் ஆட்சி செய்திருந்த காலத்தில் அவ்வாட்சியின் மீது அதிருப்தியும், பொறாமையும் கொண்டிருந்த பலர், இச்சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு வேற்று நாட்டு அரசனுடன் கூட்டு சேர்ந்துக் கொண்டு வன்னியர்களை பழி தீர்க்க தலைப்பட்டு விட்டனர். வன்னிய வம்சத்தினரை அரசாட்சியிலிருந்து விரட்டி விட்டால் மட்டும் போதாது. இவர்களை நாட்டை விட்டே துரத்தி விட வேண்டும். இல்லையெனில் வன்னியர்கள் மீண்டும் மீண்டும் தலை தூக்கி அரசை மறுபடியும் கைப்பற்ற முயலுவார்கள். ஆகவே இவர்களை கூண்டோடவே அழித்து விட வேண்டும். கொலை செய்து விட வேண்டும். தூக்கில் போட வேண்டும் என்று இக்கங்காணிகள் நாட்டைப் பிடித்த அரசனுக்கு தூபம் போடவே அவனும் இதை நம்பி வன்னியர்களை பழி வாங்க முற்பட்டான். படைகளை ஏவினான். ஒற்றர்களை அனுப்பி வைத்தான்.

இந்நிலையில் தமது தலைவர்களையும், போர் வீரர்களையும் பலி கொடுத்து பரிதவித்த வன்னியர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளைத் துறந்து, சொத்து சுகத்தை எல்லாம் இழந்து உயிருக்கு பயந்து சின்னா பின்னப்பட்டு சிதறி சுக்கு நூறாகி காடுகளிலும் குகைகளிலும் மனித சஞ்சாரமற்ற இடங்களில் எல்லாம் ஒளிந்து மறைந்து வாழ்க்கையை நடத்த தலைப்பட்டனர்.

இடையிடையே இராஜ்ய ஒற்றர்களால் கண்டு பிடிக்கப்பட்ட அனேக வன்னிய வம்சத்தினர் கைது செய்யப்பட்டு அலக்கழிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டனர் அல்லது கொலை செய்யப்பட்டனர்.

# வன்னியர் அன்று பிழைக்க வேறு வழி இல்லாமல் போகவே, விவசாயத்தை மேற்கொண்டனர்!

இப்படி நாலா விதத்திலும் துன்பத்திற்குள்ளான வன்னியர்கள், தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேறு ஒரு வழியும் இல்லாததால் அவரவர்கள் தங்கி தலை மறைவாக இருந்த இடங்களையே தங்களுக்கு வாழ்க்கைக்குகந்த இடமாக மாற்றிக் கொண்டனர். குடியிருக்க அவ்விடத்திலேயே ஒட்டுக் குடிசையை அமைத்துக் கொண்டு, வயிற்றைக் கழுவ காடுகளை அழித்து பூமியை பண்படுத்தி விவசாயம் செய்து ஜீவிக்க தலைப் பட்டு விட்டனர்.

இந்த முறை பல ஆண்டு காலம் நீடித்து விட்டபடியால் இவர்களுடைய பழைய பட்டணத்து நாகரீகம் மங்கி காட்டுப் பிரதேச வாசிகளாகவும் கல்வி கேள்விகளில் சிறந்திருந்த இவர்கள். கல்வி அறிவற்றவர்களாகவும், ஆடவர் கையில் தடியுடனும், அரை நிர்வாணத்துடனும், பெண்டீர் எல்லாம் அநாகரீக வேஷத்துடனும் கால தேச வர்த்தமானத்தினால் மாறி விட்டனர்.

ஆனால் வன்னியர்கள் நாட்டை மாற்றானிடம் விட்டுவிட்டு ஓடி வந்து விட்ட பிறகு அனைவரும் நாம் மேலே சொன்னபடி கை கட்டி வாய் பொத்தி வெறுமனே இருந்து விடவில்லை. இவர்களிலும் வலிமை கொண்ட வீர புருடர்கள் சிலர் அப்போதுக்கப் போது சிறுசிறு கோஷ்டிகளாக சேர்ந்து, (தங்களது நாட்டை ஆக்கிரமித்து கொண்ட அரசனுக்கு) அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தனர். பழிக்குப் பழி வாங்க வேண்டும். வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும். என்று ரோஷம் கொண்ட அதி தீவிர வீர வாலிபர்கள் மற்றும் பல போர் வீரர்கள் தாங்கள் இழந்த நாட்டை மீட்க பலமுறை முனைந்து போரிட்டு இருக்கின்றனர். ஆனால் இவர்களுடைய கிளர்ச்சிகள் எல்லாம் வெற்றியடையாமல் போய் விட்டன. இக்கிளர்ச்சியின் காரணமாக எண்ணற்றவர்கள் இறக்கவும், கொடுமைக்கு உட்படவும் நேரிட்டு விட்டது.

# <u>ஆண்டப் பரம்பரை இன்று,</u>
# <u>ஆண்டிப் பரம்பரையாக மாறிவிட்டது!</u>



இதனால் வன்னிய சமூகத்தில் பல மற்றவர்களின் எண்ணிக்கையும் பீதி கொண்டவர்களின் தொகையும் இனிமேல் நம்முடைய பிழைப்பை கவனிப்போம் என்று எண்ணுபவர்களின் கணக்கும் அதிகமாயிற்று. மறுபடியும் தாங்கள் இழந்த நாட்டை மீட்க வேண்டும் என்று எண்ணுபவர்களின் கணக்கு குறைந்து விடவே நாள் செல்ல செல்ல வருடங்கள் உருண்டோட நாம் ஆண்ட பரம்பரையினர் என்ற எண்ணமே இவர்களில் பெரும்பாலோருக்கு இல்லாமல் அற்றுப் போய்விட்டது. நாம் பட்டிக்காட்டான், கிராமவாசிகள் படிப்பற்றவர்கள், திக்கற்றவர்கள், அனாதைகள், ஆதரிப்பார் இல்லாதவர்கள் என்று இவர்களே தங்களுக்குள் எண்ணும்படியான சூழ்நிலைக்கு இவர்களை காலம் உருட்டிக் கொண்டு வந்து விட்டுவிட்டது.

ஆகவே தான் வன்னியர்கள் இன்று நகர் புறங்களில் அதிகமாக வசிக்காமல், கிராமங்களிலேயே அதிகமாக இருப்பதும் இச்சமூகத்தினரில் 100க்கு 80 சதம் போர் விவசாயத் தொழிலிலேயே ஈடுபட்டிருப்பதும், மேலும் இவர்கள் வருவதால் நாகரீகம் குன்றி கல்வியிலும் மற்றும் பலவற்றிலும் தாழ்ந்து இருப்பதற்கு நாம் மேலே கூறிய காரணம் தான் என்பதை வாசகர்கள் நன்கு புரிந்துக் கொண்டிருக்கலாம்.

...

# தமிழ் மன்னர் கட்டிய திருக்கோயில்கள்

| கோயில்கள் | கட்டியவர்கள் |
|---|---|
| காஞ்சி, கயிலாசநாதர் கோயில் | இராசசிம்மன் |
| மாமல்லபுரம் கோயில் | நரசிம்ம வர்மன் |
| காஞ்சி, ஏகாம்பரநாதர் கோயில் | நரசிம்ம வர்மன் |
| திருத்தணி கோயில் | அபராசித வர்மன் |
| தஞ்சை பெரிய கோயில் | முதல் ராஜராஜன் |
| திருப்பதி கோயில் | கருணாகர சோழன் |
| காஞ்சி, ஆதிவராகர் கோயில் | சிம்ம விஷ்ணு |
| காஞ்சி, வைகுந்த பெருமாள் கோயில் | இரண்ய வர்மன் |
| மதுரை மீனாட்சி அம்மன் கோயில் | சுந்தரபாண்டியன் |
| ராமேஸ்வரம் கோயில் | குலசேகர பாண்டியன் |
| திருச்சி, மலைக்கோட்டை கோயில் | மகேந்திர வர்மன் |
| மகேந்திரவாடி கோயில் | மகேந்திர வர்மன் |
| திருக்கழுக்குன்றம் கோயில் | மகேந்திர வர்மன் |
| நாமக்கல் கோயில் | மகேந்திர வர்மன் |
| பல்லவபுரம் கோயில் | மகேந்திர வர்மன் |
| வல்லம் கோயில் | மகேந்திர வர்மன் |
| மாமண்டூர் கோயில் | மகேந்திர வர்மன் |
| தளவானூர் கோயில் | மகேந்திர வர்மன் |
| மண்டபப்பட்டு கோயில் | மகேந்திர வர்மன் |

சீயமங்கலம் கோயில் மகேந்திர வர்மன்

சிதம்பர நடராஜர் கோயில் சிம்ம வர்மன்

சிதம்பர நடராஜர் கோயிலில் பொன் விமானம் புதுப்பித்தவன் 1வது பராந்தக சோழன்

...

## சோழ மன்னர்களின் ஆட்சிக் காலம்?

ஆரம்பக் கால சோழரின் ஆட்சிக் காலம் (சரியாக அறிய முடியவில்லை)

இடைக் கால சோழரின் ஆட்சிக் காலம் கி.பி. 800-1100
பிற்கால சோழரின் ஆட்சி காலம் கி.பி. 1100 - 1350

## சோழரின் பேரரசை நிலை நாட்டிய வீர மன்னர்கள்

கரிகாலன் திருமாவளவன் - கி.பி. 5வது நூற்றாண்டு

இம்மன்னன் வடநாட்டு ஆரிய மன்னர்களான வஜ்சிர நாட்டரசர்களை வென்று இமயத்தில் புலி கொடி நாட்டினான்.

விசயாலய சோழன் - கி.பி. 846 - 880

இம்மன்னன் உறையூரில் இருந்த தலை நகரை தஞ்சைக்கு மாற்றினான்

ஆதித்த சோழன் - கி.பி. 870 - 907
முதல் பராந்தக சோழன் - கி.பி. 907 - 953
இம்மன்னன் இலங்கையையும், ஈழத்தையும் வென்றான்

முதல் இராஜராஜ சோழன் - கி.பி. 985 - 1013

இம்மன்னன் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலை கட்டினான்.

முதல் இராஜேந்திர சோழன் - கி.பி. 1014

இம்மன்னன் வடநாட்டு அரசரை வென்று, இமயத்தில்புலி கொடியை நாட்டி கங்கை நீரை கொண்டு வந்து கங்கை கொண்ட சோழபுரத்தை அமைத்தவன்.

முதல் இராஜாதி இராஜன் - கி.பி. 1018

முதல் குலோத்துங்க சோழன் - கி.பி. 1060

இம்மன்னன் ஒரு கன்றின் உயிருக்காக தனது மகனின் உயிரை வாங்கினான்.

விக்ரம சோழன் - கி.பி. 1118

2வது இராஜஇராஜன் - கி.பி. 1173

3வது குலோத்துங்கன் - கி.பி. 1218

**சோழர் ஆட்சியை கோட்டை விட்டவன்**

3வது இராஜஇராஜன் - கி.பி. 1256

**சோழர் ஆட்சியை அழித்த**
**வேற்று நாட்டு மன்னர்கள்**

பாண்டியர் + விஜய நகரத்து அரசர்கள்

...

# மகா சங்கத்தின் சிறப்பு விழாக்கள்

மகா சங்கத்தில் அன்று இரு பிரிவினர்கள் நிர்வாகத்தில் இருந்த போதிலும் நிர்வாகப் பிடி அனைத்தும் (கோபால நாயகருக்குப் பிறகு) திரு. மு. இராசு நாயகர் அவர்களிடம் தான் இருந்து வந்தது. மகா சங்கத்தின் வேலைகளுக்கான செலவுக்கு தம் சொந்த பணத்தை அவ்வப்போது இவர் தாராளமாக அன்று கொடுத்து உதவியுள்ளார். மகா சங்கம் வளர்ச்சி பெற அன்று கா. கோபால நாயகர் பொறுப்பேற்று நடத்தியது போல் அவருக்குப் பிறகு இப்பொறுப்பை, திரு. மு. இராசு நாயகர் அவர்கள் தான் ஏற்றுக் கொண்டு சங்க வேலைகளை செய்து வந்துள்ளார். 1928வது ஆண்டிற்குப் பிறகு இன்று வரையில் இவர்தான் மகா சங்கத்தின் போஷகராக இருந்து வருகிறார். ஆக மகா சங்கம் தோன்றி வளர்த்ததில் 3 போஷகர்களுண்டு. அதில் 1. கா. கோபால நாயகர், 2. கா. கோ. பலபத்திர நாயகர், 3. மு. இராசு நாயகர் ஆக இவர்களுக்கு வன்னிய உலகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

நிற்க, மகா சங்கம் 08.04.1888ல் தோன்றியது என்று முன்பே கூறியிருக்கிறோம். இதனுடைய 25வது வருட கொண்டாட்டம் அதாவது வெள்ளி விழா 1913ல் அன்று திருச்சி ஜில்லாவில் சேர்ந்திருந்து, இன்று சேலம் ஜில்லாவிற்கு மாற்றப்பட்டுள்ள நஞ்சையிடையாற்றில் சிறப்பாக நடந்தேறியுள்ளது. திரு. எஸ். கந்தசாமி கண்டர் அவர்கள் இவ்விழாவை பொறுப்பேற்று நடத்தினார்.

இதற்கு பிறகு மகா சங்கத்தின் தங்க விழா (50வது வருட கொண்டாட்டம்) 05.05.1940ல் சென்னை மைலாப்பூரில் நடைபெற்றது. இவ்விழாவை திரு. மு. இராசு நாயகர் பொறுப்பேற்று அதி விமரிசையாக நடத்தி வைத்தார்.

நிற்க, இம் மகா சங்கத்தின் வைர விழாவை நடத்த வேண்டிய காலமும், நெருங்கிக் கொண்டு வருகிறது. இத்தமிழ்நாட்டில் ஏன்? இந்தியாவிலேயே எந்த ஒரு சமூகத்திற்கும், அரசியல் கட்சிகளுக்கும் கூட, வைர விழா நடந்ததே கிடையாது.

ஆகவே நமது தாய் சங்கமான மகா சங்கத்தின் வைர விழாவை அதி விமரிசையாக நாம் கொண்டாட வேண்டும்.

இதற்கு பல ஆயிரம் ரூபாய்கள் செலவாகலாம். சென்னை இராயபுரம் திரு. மு. இராசு நாயகர் தான் இதை ஏற்று சிறப்புடன் நடத்த பொறுப்பும், அனுபவமும் கொண்டவர். இவர் ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் தனது சொந்த பணத்தையும் எடுத்து செலவு செய்யக்கூடிய வள்ளல்களின் வரிசையில் வந்தவர். மேலும், இவர் மகா சங்கத்தின் பழங்கால தலைவர்களில் மிகவும் தலைசிறந்தவர்.

• ••• •